**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் - 2018**

---

**1.1 அபிப்பிராயம்**

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ பல்கலைக்கழகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர் கல்வி அமைச்சு செயலாளரின் 2018 நவம்பர் 08 ஆம் திகதிய எச்ஈ/யூடி/09/டிஎவ்/விபிஏ/201 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக உள்நாட்டு நாணயத்தைப் பயன்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காத போதிலும் 02 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 9,293,409 உள்ளூர் நிதிகளை செலவிட்டு 19 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக அனுப்பப்பட்டிருந்தனர். | விடுமுறை மற்றும் மானியங்கள் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உரிய கற்கைநெறிக் கட்டணங்கள் மற்றும் அமையப் படிகளை கொடுப்பனவு செய்தல் பல்கலைக்கழகத்தால் பின்பற்றப்படுகின்ற முறைமையொன்றாக உள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக உள்ளூர் நிதிகள் பயன்படுத்தப்படக் கூடாது என உயர் கல்வி அமைச்சு அறிவித்திருந்த சமயத்தில் பங்குபற்றல் இடம்பெற்றிருந்தது. | முறையான அங்கீகாரம் மீது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 56,929,162 தொகையான ஊழியர் கடன் மீதியானது 10 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகள் தொடக்கம் 09 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக அறவிடப்படாத ரூபா 1,015,893 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை கொண்டிருந்ததுடன் அதில் ரூபா 535,039 கூட்டுமொத்தமான 6 கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் அறவீடுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 11 இன் 2014/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின்<br><br>(iii) ஆம் பிரிவு | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிற்கான ஆராய்ச்சிப் படிகளை கொடுப்பனவு செய்யும் போது ஆராய்ச்சி ஆரம்பித்ததன் பின்னர் 06 மாதங்களினுள் ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கான குழுவிற்கு உள்ளக ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அதன் செயன்முன்னேற்றத்துடன் குழு திருப்பதியடைந்தால் மாத்திரமே ஆராய்ச்சிப் படிகள் செலுத்தப்பட முடியும். எனினும் அதற்கு முரணாக ரூபா 27,999,162 கூட்டுமொத்தமான ஆராய்ச்சிப் படிகள் கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணியினரின் அங்கத்தவர்களிற்கு 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன. | உள்ளக ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு பதவியணியினரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) ஆம் பிரிவு | ஆராய்ச்சியின் தன்மை மற்றும் நோக்கெல்லையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிக் காலப்பகுதி ஆகக்கூடியது 03 ஆண்டுகளாக காணப்பட வேண்டும். எனினும் தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அதே ஆராய்ச்சியை பூர்த்தி செய்வதற்கு விரிவுரையாளர்களால் 04 ஆண்டுகள் தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மேலதிகக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2014 செப்தெம்பர் 03 இன் யூவிபிஏ/ஏஈ/2014/01 ஆம் இலக்க பல்கலைக்கழக உள்ளகச் சுற்றறிக்கை | கல்விசார் உதவிப் பதவியணியினர் கைவிரல் அடையாள இயந்திரங்களில் 2014 ஒக்தோபர் 01 இலிருந்து அவர்களின் உள்வருகை மற்றும் வெளிச் செல்லல்களை பதிவு செய்ய வேண்டிய போதிலும் வருகை பதிவேட்டில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதிலும் பல தடவைகள் உள்வருகை அல்லது வெளிச்செல்லல் இரண்டில் ஒன்று மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது. | கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 34,126,036 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,211,346 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 4,085,310 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்கான வருமானம் ரூபா 77,091,142 ஆல் அதிகரித்திருந்ததுடன் செலவினம் ரூபா 73,005,834 ஆல் குறைவடைந்திருந்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விடுமுறை தொடர்பான அறிக்கையின் பிரகாரம் கல்விசார் உதவிப் பதவியணியினரின் 08 உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டின் போது அவர்களிற்கு உரித்தான 45 நாட்கள் விடுமுறையினை விஞ்சி 11 நாட்கள் தொடக்கம் 67 நாட்கள் வரையான விடுமுறைகளை எடுத்திருந்தனர். எனினும் சம்பளத்திலிருந்து அவ் விடுமுறைகளை அறவீடு செய்வதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பளமற்ற விடுமுறைக்கான பணத்தை அறவீடு செய்வதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் பிரகாரம் சம்பளமற்ற விடுமுறை சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015/2016 கல்வியாண்டில் சங்கீத பீடத்தின் விரிவுரைகளை மேவுகை செய்வதற்காக நிரந்தர மற்றும் தற்காலிக கல்விசார் பதவியணியினர் 53 பேரும் வெளிவாரி கல்விசார் பதவியணியினர் 102 பேரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட மொத்த விரிவுரை மற்றும் செயன்முறை மணித்தியாலங்கள் 40,015 ஆக காணப்பட்டதுடன் அதில் 16,680 மணித்தியாலங்கள் நிரந்தர மற்றும் தற்காலிக கல்விசார் பதவியணியினரிற்காகவும் 22,060 மணித்தியாலங்கள் வெளிவாரி கல்விசார் பதவியணியினரிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. எனினும் மிகுதி 1,275 மணித்தியாலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு செய்யப்படாத மணித்தியாலங்களின் எண்ணிக்கை செயன்முறைப் பயிற்சிகள் மற்றும் சுயமான கற்றல்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட மொத்த விரிவுரை மற்றும் செயன்முறை மணித்தியாலங்கள் கல்விசார் பதவியணியினரிற்கிடையே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2015/2016 கல்வியாண்டிற்காக நடன மற்றும் நாடகக் கலைப் பீடத்தில் மேற்கொள்ளப்படும் விரிவுரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது நிரந்தரப் பதவியணியினரிலுள்ள 10 பேரிற்கு work norms மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை 4,415 ஆக காணப்பட்டது. எனினும் பீடத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 3,254 ஆக காணப்பட்டது. இதனால் விரிவுரையாளர்களிற்கான விரிவுரை மணித்தியாலங்கள் 1,161 மணித்தியாலங்களால் குறைத்து ஒதுக்கீடு | எதிர்காலத்தில் மேவுகை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்வதற்கு விரிவுரையாளர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | மாணவர்களின் கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்காக விரிவுரையாளர்கள் அவர்களிற்கு நிர்ணயிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களில் 571 மணித்தியாலங்களை மேவுகை செய்திருக்காத 7 விரிவுரையாளர்கள் காணப்பட்டனர். | | |
| (இ) | விரிவுரைகளை மேவுகை செய்வதற்காக வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் வேலையிலீடுபடுத்தியிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 38,223,324 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது சங்கீத பீடத்தில் 810 விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்வதற்கு நியமனம் செய்யப்பட்ட வருகை கல்விசார் பதவியணியினரில் 08 விரிவுரையாளர்கள் ஒரு விரிவுரையையேனும் நடாத்தியிருக்காததுடன் அவர்களில் 25 பேர் ஒதுக்கீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களில் 50 சதவீதத்தை விடக் குறைவான மணித்தியாலங்களை மேவுகை செய்திருந்தனர். | வருகை விரிவுரையாளர்களின் கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் குறைக்கப்பட முடியும். | வருகை விரிவுரையாளர்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அவர்களிற்காக குறித்துரைக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் அவர்களால் மேவுகை செய்யப்பட்டிருந்ததென்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்ட 24 பட்டப்பின் படிப்பு ஆய்வறிக்கைகளில் 12 இன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளிற்கும் இடையேயான காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தது. பரீட்சகர்களை நியமனம் செய்வதிலுள்ள தாமதம், பரீட்சகர்களால் ஆய்வறிக்கைகளை திருத்தம் செய்வதற்காக நீண்ட காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் அதற்கான பிரதான காரணமாக இருந்தது. | பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக முறையான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பரீட்சைப் பெறுபேறுகள் விரைவாக வெளியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட 65 பட்டதாரிகளில் 32 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 21 பட்டதாரிகள் ஆகக்கூடிய 4 வருட கால தத்துவ முதுமானி (Doctor of Philosophy) கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்தனர். மேலும் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 41 பட்டதாரிகள் கற்கைநெறியிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். 3 பட்டதாரிகளின் ஆய்வறிக்கைகள் பரீட்சைப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை 18 பட்டதாரிகள் மாத்திரமே பூர்த்தி செய்திருந்தனர். | மாணவர்கள் கற்கைநெறிகளிலிருந்து விலகுவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2008, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக நடனம் தொடர்பான ஒரு ஆண்டு மற்றும் இரண்டு ஆண்டு டிப்ளோமா கற்கைநெறிகளிற்காக 239 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 60 பேர் மாத்திரமே கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்தனர். 64 பட்டதாரிகளின் ஆய்வறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் 48 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 115 பட்டதாரிகள் உரிய திகதியில் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்திருக்காததால் அவர்கள் கற்கைநெறியை கைவிட்டிருந்ததாக கருதப்பட்டிருந்தது. | ஒரு ஆண்டு கற்கைநெறியை பூர்த்திசெய்திருந்த மாணவர்களிற்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி மாணவர்கள் கற்கைநெறியை கைவிட்டதாக கருதப்பட்டிருந்தது. | பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிடுவதற்கும் கற்கைநெறிகளைக் கைவிடுவதைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2016 ஆகஸ்ட் மாதத்தில் உயர்தரப் பரீட்சை ஊடாக பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்றிருந்த மாணவர்கள் 1½ வருட கால தாமதமொன்றுடன் 2018 யூன் மாதத்தில் 2016/2017 கல்வியாண்டிற்காக | பதவியணியினரின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக ஆட்சேர்ப்புக்கள் தாமதமடைந்திருந்தன. | பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் தகுதிபெற்ற மாணவர்கள் விரைவாக சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |

பல்கலைக்கழகத்திற்கு உட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2017 ஆகஸ்ட் மாதத்தில் உயர்தரப் பரீட்சை ஊடாக 2017/2018 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்றிருந்த மாணவர்கள் 17 மாதங்கள் கடந்திருந்த போதிலும் 2019 மே 15 வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு உட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அரங்கேற்றக் கலைகள் விழாவிற்காக ரூபா 1,792,500 தொகையை செலவிடுவதற்காக நிதிக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை நடைமுறைக்கு முரணாக வழங்குநரொருவரை தெரிவு செய்ததன் மூலம் அவற்றின் ஒளி மற்றும் ஒலி முறைமைகளிற்காக ரூபா 900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மாணவர் சங்கத்தால் கூறுவிலைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் விழா ஆரம்பித்த பின்னர் ஒரு நாள் அவை பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பட்டதாரிகளின் தரம், தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் திறன்களை முன்னேற்றும் தொழிற்பாடுகள் மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி துறைகளில் அதீத திறமைகளை அதிகரித்தல் தொடர்பான தொழிற்பாடுகள் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை அடைந்துகொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. | தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தந்திரோபாய திட்ட இலக்குகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட பல்கலைக்கழகத்தின் தொலைக் கல்வி முறைமையின் முன்னேற்றத்திற்காக தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து உயர்தர ஆசிரியர்களிற்காக டிப்ளோமா கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தமிழ், ஹிந்தி, யப்பான் மற்றும் கொரிய மொழிகளில் புதிய வெளிவாரி பட்டக் கற்கைநெறிகள், சான்றிதழ் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துதல் போன்ற தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களின் உள்ளக எதிர்ப்புக்கள் மற்றும் புதிய மொழிக் கற்கைநெறிகளை ஆரம்பிப்பதா என எதிர்காலத்தில் தீர்மானித்தல் காரணமாக உட்சேர்த்துக்கொள்ளத் தவறியமைக்கான மாற்றுவழியொன்றாக பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தந்திரோபாயத் திட்டம் யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 37,000,000 மற்றும் ரூபா 1,505,000 கூட்டுமொத்தமான முறையே 05 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 05 மீண்டெழும் செலவின விடயங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 11 செலவின விடயங்களின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையேயான முரண்கள் 50 சதவீதத்தை விஞ்சியிருந்ததால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தவிர்க்க முடியாத காரணங்களினால் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையே முரண்கள் ஏற்பட்டிருந்தன. | பாதீட்டு முரண்களை சாத்தியமானளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிதியேற்பாடுகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ என்பவற்றின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களும் | 2019/2021 தந்திரோபாயத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்ப்படுத்துதல் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகளை அடைந்துகொள்ளும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நிறுவனத்தின் |

செயற்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்குரியதாக கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தால் அதனது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள் தொடர்பான இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்குகள் அடைந்துகொள்ளப்படும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறுவனத்தின் திட்டங்களில் உள்ளடக்குதல், சுட்டிகளை தயாரித்தல், தரவுகளை பேணுதல் மற்றும் இலக்கு கட்டங்களை இனங்காணுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

திட்டங்களில் உள்ளடக்கப்படுதல், சுட்டிகளை தயாரித்தல், தரவுகளைப் பேணுதல் மற்றும் இலக்குக் கட்டங்களை இனங்காணுதல் என்பவற்றிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.